பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 07 2026 TUESDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பாதுகாப்பிற்கு ராணுவத்தினர் அயராது பாடுபட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

2. நாட்டின் செழுமையான ஜவுளி பாரம்பரியம் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை வெளிப்படுத்தும் வகையில், பாரத் டெக்ஸ் சர்வதேச ஜவுளி கண்காட்சி அமைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

3. வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்த தமிழகத்தைச் சேர்ந்த 10 பேரின் உடல்கள் இன்று அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

4. பாங்காக்கில் மதுபான விடுதியில் நேரிட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30-ஆக அதிகரித்துள்ளது.

5. ஜப்பான் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

நாட்டின் பாதுகாப்பிற்கு ராணுவத்தினர் அயராது பாடுபட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லி, போர் நினைவுச் சின்னத்தில், கார்கில் போரில் உயிரிழந்த ராணுவ வீரர்களின் தியாகத்தை நினைவுகூரும் வகையிலான இருசக்கர வாகனப் பேரணியை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நாட்டு மக்கள் மனதில் இவர்களது தியாகம் என்றும் நிலைத்து நிற்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

போர் நினைவுச் சின்னத்திலிருந்து தொடங்கிய இந்தப் பேரணி, அடுத்த 13 நாட்களில். சண்டிகர், பஞ்சாப், ஹிமாச்சலப்பிரதேசம் வழியாக கார்கில் போர் நினைவிடத்தில் நிறைவடையும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>>>><<<<<<<

நாட்டின் செழுமையான ஜவுளி பாரம்பரியம் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை வெளிப்படுத்தும் வகையில், பாரத் டெக்ஸ் சர்வதேச ஜவுளி கண்காட்சி அமைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இதனை தொடங்கி வைத்துப் பேசிய அவர், ஜவுளித் துறையின் வளர்ச்சிக்கு இந்த கண்காட்சி கூடுதல் உத்வேகம் அளிக்கும் என்றும் தெரிவித்தார்.

நெசவாளர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களின் முன்னேற்றத்திற்கு இந்த கண்காட்சி உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஜவுளி பொருட்களை சர்வதேச அளவில் கொண்டு சேர்ப்பதில் இந்த கண்காட்சி முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் திரு. கிரிராஜ் சிங் குறிப்பிட்டார்.

>>>>>>><<<<<<<

கத்தாரின் முன்னாள் அரசர் Sheikh Hamad Bin Khalifa Al Thani-யின் இறுதிச்சடங்கில் பங்கேற்க மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ இன்று தோஹா புறப்பட்டுச் சென்றார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியா – கத்தார் இடையேயான உறவுகளை மேம்படுத்துவதில் Al Thani-யின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடையும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், ரொபாடிக்ஸ், டிஜிட்டல் சுகாதாரம், உயிரி தொழில்நுட்பம் உட்பட நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் இந்த இலக்கை அடைவதில் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் அந்த அமைச்சகத்தின் சமூகவலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசநோய், புற்றுநோய், தாய்சேய் நல மருத்துவம், மனநல மருத்துவம், பெருந்தொற்று போன்றவற்றுக்கான சிகிச்சையில் இந்த தொழில்நுட்பம் உதவிகரமாக உள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உள்நாட்டு தொழில்நுட்பங்கள் வாயிலாக சுகாதார துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சகத்தின் சமூகவலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

இந்தியா - பிரிட்டன் இடையேயான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம், நாளை முதல் செயல்பாட்டுக்கு வருகிறது.

இதன்மூலம், இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு பிரிட்டனில் 99 சதவீத வரிச் சலுகை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார ஒத்துழைப்பு வலுப்பெற இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

உணவுப் பொருட்கள் மீதான 70 சதவீத இறக்குமதி வரி, கடல்சார் உணவுப் பொருட்கள் மீதான 21 சதவீத வரி, பொறியியல் சாதனங்கள் மீதான 18 சதவீத வரி நாளை முதல் முற்றிலும் ரத்து செய்யப்படவுள்ளன.

>>>>>>><<<<<<<

வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்த தமிழகத்தைச் சேர்ந்த 10 பேரின் உடல்கள் இன்று அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

வியட்நாமின் Ho Chi Minh நகரிலிருந்து 15 இந்தியர்களின் உடல்கள் நேற்றிரவு மும்பை கொண்டுவரப்பட்டன.

திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு பேரின் உடல்கள் இன்று சென்னை வந்து சேர்ந்தன.

பின்னர், அரசு ஏற்பாடு செய்த சிறப்பு வாகனத்தின் மூலம், அவர்களது உடல்கள் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

6 பேரின் உடல்கள் மும்பையிலிருந்து விமானம் மூலம் கோவை கொண்டுவரப்படவுள்ளன.

ஆந்திராவைச் சேர்ந்த 3 பேரின் உடல்கள் இன்று காலை ஹைதராபாத் கொண்டு செல்லப்பட்டன.

இந்த உடல்கள், சொந்த ஊர்களான மச்சிலிப்பட்டினம், ஹிந்துப்பூர், கடப்பா-வுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

கேரளாவைச் சேர்ந்த இரண்டு பேரின் உடல்கள் இன்று திருவனந்தபுரம் கொண்டு வரப்பட்டன. அங்கிருந்து சொந்த ஊரான கொட்டாரக்காரா-வுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

>>>>>>><<<<<<<

பாலஸ்தீன மக்களுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, பெல்ஜியம் தலைநகர் பிரஸ்செல்ஸில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய வெளியுறவு அமைச்சக செயலர் ஸ்ரீபிரியா ரெங்கநாதன், பாலஸ்தீனத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு இந்தியா தொடர்ந்து உதவியளித்து வருவதாக தெரிவித்தார்.

அந்நாட்டின் சுகாதாரம், கல்வி, தொழில் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா நிதியுதவியுடன் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

ஐ.நா உதவியுடன் பாலஸ்தீன அகதிகளின் மறுவாழ்விற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் ஸ்ரீபிரியா ரெங்கநாதன் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

ஜார்க்கண்ட் மாநிலம், Latehar மாவட்டத்தில் காவல்துறையினர் மேற்கொண்ட சோதனையின் போது, மாவோயிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவரைப் பற்றி தகவல் தருவோருக்கு 20 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் தேதி சந்துவா அருகே காவல்துறையினர் மீது இவர் நடத்திய தாக்குதலில் 4 காவலர்கள் உயிரிழந்தனர்.

இதனையடுத்து, இவரை தேடும் பணியில் காவல்துறையினர் ஈடுபட்டு வந்தனர்.

>>>>>>><<<<<<<

தாய்லாந்தின் பாங்காக்கில் மதுபான விடுதியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது நேரிட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30-ஆக அதிகரித்துள்ளது.

இந்த தீ விபத்தில் காயமடைந்த 70 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 24 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதாக பாங்காக் மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு வருவதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>>><<<<<<<

அமெரிக்கா தொடர்ந்து 3-வது நாளாக ஈரான் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரானின் Abu Musa, Bandar Abbas, Chahbahar உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

இதற்கு பதிலடியாக, பஹ்ரைன் மற்றும் ஜோர்டானில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இரண்டு எண்ணெய் கப்பல்கள் மீதும், ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்நிலையில், ஈரானின் *Pickaxe* மலைப்பகுதியில் உள்ள அணுஉலை மீது தாக்குதல் நடத்தப்போவதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

சவுதி அரேபியாவின் *Abha* சர்வதேச விமான நிலையத்தின் மீது, ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஏமனின் *Sana* சர்வதேச விமான நிலையத்தின் மீது சவுதி அரேபியா நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், சவுதி வான்வெளியில் விமானங்கள் பறக்க வேண்டாம் என்று பயணியர் விமான நிறுவனங்களுக்கு, ஹவுதி ராணுவ செய்தி தொடர்பாளர் பிரிகேடியர் ஜென்ரல் *Yahya Saree* எச்சரிக்கை விடுத்துள்ளார்.

>>>>>>><<<<<<<

ஜப்பான் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் *21-14, 21-11* என்ற செட்கணக்கில் மலேசியாவின் *Wong Ling Ching*-ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் *Dhruv Kapila - Tanisha Crasto* இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Sanya Vats* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், *11-6, 11-5, 8-11, 11-8* என்ற செட்கணக்கில் இந்தியாவின் *Unnati Tripathi*-யை வென்றார்.

>>>>>>><<<<<<<

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று பர்மிங்ஹாமில் நடைபெறுகிறது.

>>>>>>><<<<<<<

*உலக கோப்பை கால்பந்து போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் - ஸ்பெயினை எதிர்கொள்கிறது.*

*Dallas மைதானத்தில் இப்போட்டி நள்ளிரவு மணி 12.30-க்கு நடைபெறவுள்ளது.*

*அட்லாண்டாவில் நாளை நள்ளிரவு மணி 12.30-க்கு நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் அர்ஜென்டினா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.*

*>>>>>>>END<<<<<<<*